கருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் – தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண் 110–ன் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பு – B.Ed. படித்து வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துள்ள 906 பழங்குடியினப் பட்டதாரிகளுக்கு மாநில கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம் வாயிலாகவும், ஆசிரியர் பட்டயப் பயிற்சியில் (D.T. Ed.) தேர்ச்சி பெற்ற 500 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மற்றும் B.Ed. பட்டப்படிப்பில் தேர்ச்சி பெற்ற 500 ஆதி திராவிடர்களுக்கு ஆசிரியர் தகுதித் தேர்வில் (TET) தகுதி பெற தனியார் பயிற்சி நிறுவனங்கள் வாயிலாகவும் பயிற்சி அளித்தல் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந 7) துறை

அரசாணை (நிலை) எண்.20

நாள் : 23.02.2015

ஜய, மாசித் திங்கள் 11 ஆம் நாள்,
திருவள்ளுவர் ஆண்டு 2046

படிக்கப்பட்டது :

1. பழங்குடியினர் நல இயக்குநரின் கடித ந.க.எண்.TD/B1/320/2014, நாள் 27.08.2014.
2. ஆதி திராவிடர் நல இயக்குநரின் கடித ந.க.எண். ம2/10400/2014, நாள் 11.09.2014.

********

ஆணை:–

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவை விதி எண். 110–ன்கீழ் பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டார்கள்:–

"B.Ed. படித்து வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துள்ள 906 பழங்குடியினப் பட்டதாரிகளுக்கு, அவர்கள் ஆசிரியர் தகுதித் தேர்வில் தகுதி பெற ஏதுவாக 66.00 இலட்சம் ரூபாய் செலவில் மாநில கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம் வாயிலாகவும், ஆசிரியர் பட்டயப் பயிற்சியில் (D.T. Ed.) தேர்ச்சி பெற்ற 500 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மற்றும் B.Ed. பட்டப்படிப்பில் தேர்ச்சி பெற்ற 500 ஆதி திராவிடர்களுக்கு ஆசிரியர் தகுதித் தேர்வில் தகுதி பெற வழிவகை செய்யும் வகையில் 55.00 இலட்சம் ரூபாய் செலவில் தனியார் பயிற்சி நிறுவனங்கள் வாயிலாகவும் பயிற்சி அளிக்கப்படும்."

மேற்கண்ட புதிய அறிவிப்பு தொடர்பாக ஆதி திராவிடர் நல இயக்குநர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநரிடம் விரிவான கருத்துருக்கள் கோரப்பட்டன.

2. அதன் அடிப்படையில், மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட பழங்குடியினர் நல இயக்குநரின் கருத்துருவில், B.Ed., பட்டப்படிப்பில் தேர்ச்சி பெற்று வேலைவாய்ப்பில்லாமல் உள்ள பழங்குடியினத்தவர்களில், பழங்குடியினர் அதிகமாக வசிக்கும் 16 மாவட்டங்களில் 498 ஆண்கள் மற்றும் 408 பெண்கள் அடங்கிய பட்டியல் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநரிடமிருந்து பெறப்பட்டுள்ளது எனவும், இவர்களுக்கு அரசால் நடத்தப்படும் ஆசிரியர் தகுதித் தேர்வுக்கு பயிற்சி வழங்கலாம் எனவும், இப்பயிற்சியினை மாநில கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம் (SCERT) மூலம் 40 நாட்களுக்கு பள்ளி விடுமுறை நாட்களில் காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை பாடவாரியாக பயிற்சி அளிக்கலாம் என்றும், இப்பயிற்சியினை அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப்பள்ளிகளில் நடத்தினால் பிற்காலத்தில் அவ்வாசிரியர்கள் அப்பள்ளிகளில் பணிபுரிவதற்கு ஏதுவாக இருக்கும் என்றும் தெரிவித்து, இதற்கான செலவினமாக தலா ஒரு பயிற்சி ஆசிரியருக்கு நாளொன்றுக்கு ரூ.1,000/–மும், போக்குவரத்து செலவினமாக ரூ.500/–மும், மொத்தம் ரூ.60,00,000/– (ரூபாய் அறுபது இலட்சம் மட்டும்) மற்றும் பயிற்சி புத்தகங்களுக்கான செலவினமாக தலா ஒரு நபருக்கு ரூ.600/– வீதம் 1000 பயிற்சியாளர்களுக்கு ரூ.6,00,000/– (ரூபாய் ஆறு இலட்சம் மட்டும்) ஆக மொத்தம் ரூ.66,00,000/– (ரூபாய் அறுபத்து ஆறு இலட்சம் மட்டும்) ஒதுக்கீடு செய்யுமாறு அரசைக் கோரியுள்ளார்.

3. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட ஆதி திராவிடர் நல இயக்குநரது கருத்துருவில், ஆசிரியர் தேர்வு வாரியத்தால் நடத்தப்பட்ட ஆசிரியர் தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும் என இலட்சக்கணக்கான ஆதி திராவிடர்/ பழங்குடியின இளைஞர்கள் தேர்வு எழுதியுள்ளனர் என்றும், இத்தேர்வு முறை புதியது என்பதால், போதுமான விழிப்புணர்வு, வழிகாட்டுதல் இல்லாததால் மற்ற தேர்வர்களைக் காட்டிலும் குறைந்த அளவே தேர்ச்சி பெற்றனர் என்றும் காலிப்பணியிடங்களுக்கு போதுமான எண்ணிக்கையில் தேர்ச்சி பெறவில்லை என்றும், பின்னடைவுக் காலிப்பணியிடங்கள் இருந்த வண்ணமே உள்ளன என்றும் தெரிவித்துள்ளார்.

4. மேலும், ஆசிரியர் தகுதித் தேர்வு இரண்டு பகுதியாக தாள்–1 மற்றும் தாள்–2 என இருவேறு நிலைகளில் நடத்தப்படுகிறது என்றும், D.T.Ed படித்தவர்கள் இடைநிலை ஆசிரியராக நியமனம் பெறுவதற்கு தாள்–1 தேர்வும், B.Ed படித்தவர்கள் பட்டதாரி ஆசிரியராக நியமனம் பெற தாள்–2 தேர்வும் எழுதித் தேர்ச்சி பெற வேண்டும் என அரசால் ஆணையிடப்பட்டுள்ளது என்றும், தமிழ்நாட்டில் சுமார் 600 ஆசிரியர் பயிற்சி கல்லூரிகளும், ஆசிரியர் பட்டப்படிப்பு பயில்வதற்கு 250 கல்வி நிலையங்களும் உள்ளன என்றும், அதில் முதற்கட்டமாக பட்டயப்படிப்பு படித்த ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தவர்களில் சுமார் 500 நபர்களுக்கும், பட்டப்படிப்பு படித்தவர்களில் 500 ஆதி திராவிடர்களுக்கும் அவர்கள் ஆசிரியர் தகுதித் தேர்வில் (Teacher Eligibility Test) தேர்ச்சி பெறும் வகையில் ஆறு மாதங்களுக்கு பயிற்சி அளிக்கலாம் என்றும், இப்பயிற்சியினை தாட்கோ நிறுவனத்தின் மூலமாக தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் பயிற்சி மையங்களை ஏற்படுத்தி மதிப்பூதியத்தில் பயிற்சி ஆசிரியர்களை நியமித்து பயிற்சி வழங்கலாம் என்றும், மேற்கண்ட பயிற்சி மையங்களில் மாணவ/மாணவியர்கள் பயிற்சி பெற அவர்கள் பெற்ற மதிப்பெண் அடிப்படையில் தேர்வு செய்திடலாம் என்றும், கல்வி உதவித்தொகைக்கு உள்ளது போல் பெற்றோர் அல்லது பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.2.00 இலட்சத்திற்கு மிகாமல் இருக்கவும், பட்டம் மற்றும் பட்டயப்படிப்பில் தேர்ச்சி பெற்றவர்கள் 60% சதவீதத்திற்கும் குறையாமல் மதிப்பெண்கள் பெற்றிருத்தல் அவசியம் என்பதை தகுதியாக நிர்ணயிக்கலாம் என்றும், பயிற்சி அளிக்கப்பட வேண்டிய மாணவ, மாணவியர்களுக்கு ஆசிரியர் கல்வியில் பட்டம் அல்லது பட்டயம் பெற்றவர்களை தகுதியுள்ள நபர்களாகவும், அவர்களுக்கான

வயது வரம்பு விண்ணப்பிக்க கடைசி நாளன்று குறைந்த பட்சம் 19 வயது பூர்த்தியடைந்தவராக நிர்ணயிக்கலாம் என்றும், இதற்கு கீழ்க்கண்டவாறு செலவினம் தேவைப்படும் என்றும் தெரிவித்துள்ளார்:–

| விவரம் | பயிற்சித் தொகை (ஆறு மாதங்களுக்கு) | 500 நபர்களுக்கு ஆகும் தொகை (லட்சங்களில்) |
|---|---|---|
| ஆசிரியர் தகுதித் தேர்வு தாள் – 1 | இடைநிலை ஆசிரியர் ரூ.5000/– | ரூ.25,00,000/– |
| ஆசிரியர் தகுதித்தேர்வு தாள் – 2 | பட்டதாரி ஆசிரியர் ரூ.6,000/– | ரூ.30,00,000/– |
| மொத்த கூடுதல் செலவினம் | | ரூ.55,00,000/– |

5. பழங்குடியினர் நல இயக்குநர் மற்றும் ஆதி திராவிடர் நல இயக்குநரின் கருத்துருக்கள் அரசால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு, அதன் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு அரசு ஆணையிடுகிறது :–

i) B.Ed. படித்து வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துள்ள 906 பழங்குடியினப் பட்டதாரிகளுக்கு, அவர்கள் ஆசிரியர் தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற வழிவகை செய்யும் வகையில், மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் வாயிலாக பயிற்சி அளிக்க பழங்குடியினர் நல இயக்குநருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. இதன்பொருட்டு செலவினமாக ரூ.66,00,000/– (ரூபாய் அறுபத்து ஆறு இலட்சம் மட்டும்) விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்ட நிதியிலிருந்து ஒப்பளிக்கப்படுகிறது. இத்தொகையினைப் பெற்று செலவினை மேற்கொள்ள பழங்குடியினர் நல இயக்குநருக்கு அனுமதியளிக்கப்படுகிறது.

ii) ஆசிரியர் பட்டயப் பயிற்சியில் (D.T.Ed.) தேர்ச்சி பெற்ற 500 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மற்றும் பட்டப்படிப்பில் (B.Ed.) தேர்ச்சி பெற்ற 500 ஆதி திராவிடர்களுக்கு, அவர்கள் ஆசிரியர் தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற வழிவகை செய்யும் வகையில் பயிற்சி அளிக்க, உரிய தகுதி வாய்ந்த தனியார் பயிற்சி நிறுவனங்களை நடைமுறையிலுள்ள விதிமுறைகளின்படி தேர்ந்தெடுக்கவும், அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட தனியார் பயிற்சி மையங்கள் மூலம் பயிற்சி அளிக்கவும் ஆதி திராவிடர் நல இயக்குநருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. இதன்பொருட்டு செலவினமாக ரூ.55,00,000/–க்கு (ரூபாய் ஐம்பத்தைந்து இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிக்கப்படுகிறது.

6. மேலே பத்தி 5–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

I. 2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 02 பழங்குடியினர் நலன் – 796 பழங்குடியினர் பகுதித் துணைத் திட்டம் – பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II மாநில திட்டம் – JY விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் – 09 உதவித்தொகை – 01 நடப்புச் செலவுக்கான உதவித் தொகை.
(கு.தொ.கு 2225 02 796 JY 0912) (ரூ.66,00,000/–)

II. 2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 01 ஆதிதிராவிடர் நலன் – 277 கல்வி – I திட்டத்தில் சேராதது – AB கல்வி சலுகைகள் – 72 பயிற்சி.

(த.தொ.கு 2225 01 277 AB 7205) (ரூ.55,00,000/–)

7. மேலே பத்தி 5(ii)–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ஒரு புதுத்துணைப்பணி குறித்த செலவினமாகும். இதற்கு நாளடைவில் சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பெறப்பட வேண்டும். சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பெறப்படும் வரை இச்செலவினம் முதற்கண் எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணம் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டும். இதற்கான முன்பணத்தினை அனுமதிக்கும் ஆணைகள் நிதித் (வரவு–செலவு பொது I) துறையில் தனியே வெளியிடப்படும். எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து தேவையான தொகையினை முன்பணமாக பெறுவதற்கு தேவையான விண்ணப்பத்தினை உரிய படிவத்தில், இவ்வாணையின் படிகளை இணைத்து நிதித் (வரவு–செலவு பொது I) துறைக்கு விண்ணப்பிக்குமாறு ஆதிதிராவிடர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும், இச்செலவினம் மீது சட்டப்பேரவையின் ஒப்புல் பெறும் பொருட்டு 2014–2015 ஆம் ஆண்டின் துணை மதிப்பீடுகளில் சேர்த்திட ஏதுவாக துணை மானிய குறிப்பு ஒன்றினை உரிய நேரத்தில் நிதித் (ஆதி(ம)பந) துறைக்கு அனுப்பிவைக்குமாறு ஆதிதிராவிடர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. மேலும், B.Ed. படித்து வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துள்ள 906 பழங்குடியினப் பட்டதாரிகளுக்கு மாநில கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம் வாயிலாகவும், ஆசிரியர் பட்டயப் பயிற்சியில் (D.T. Ed.) தேர்ச்சி பெற்ற 500 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மற்றும் B.Ed. பட்டப்படிப்பில் தேர்ச்சி பெற்ற 500 ஆதி திராவிடர்களுக்கு ஆசிரியர் தகுதித் தேர்வில் தகுதி பெற தனியார் பயிற்சி நிறுவனங்கள் வாயிலாகவும் பயிற்சி அளிக்கப்பட்ட விவரத்தினை தவறாமல் அரசுக்கு அனுப்புமாறு ஆதி திராவிடர் நல இயக்குநர்/பழங்குடியினர் நல இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

9. இவ்வாணை, அலுவல் சார்பற்ற எண். 9578/ஆதி(ம)பந/2015, நாள் 21.02.2015–ல் நிதித் துறையின் ஒப்புதல் பெற்று வெளியிடப்படுகிறது. மற்றும் இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண் 2570 (இரண்டாயிரத்து ஐந்நூற்று எழுபது).

(ஆளுநரின் ஆணைப்படி)

கண்ணகி பாக்கியநாதன்,
அரசு செயலாளர்

பெறுநர்

இயக்குநர், பழங்குடியினர் நலன், சென்னை – 5.
இயக்குநர், ஆதி திராவிடர் நலன், சென்னை – 5.
இயக்குநர், மாநில கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம், சென்னை – 6.
அனைத்து மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள்.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை – 8.
முதன்மை மாநிலக் கணக்காயர், சென்னை – 9/18 / 35 (பெயரில்)

நகல்
முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 9.
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்
அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9.
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை
அரசுச் செயலர் அவர்களின் தனிச் செயலாளர், சென்னை – 9.
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ப.மே.1) துறை, சென்னை – 9.
நிதி (ஆதி (ம) பந / வரவு–செலவு பொது I (ம) II) துறை, சென்னை – 9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்கள்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர் 23/2/15

23/2/15